**தமிழ்நாடு பதிவுத்துறை தலைவர் நடவடிக்கைகள், சென்னை 28**
**முன்னிலை: திருமதி.பா.ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப.,**

**எண்.4364/கே1/2016 நாள்.06.02.2020**

பொருள்: பணி - தமிழ்நாடு அமைச்சுப்பணி - திருமதி.சி.தீபா, தட்டச்சர் கரூர் பதிவு மாவட்டம் - தகுதிகாண்பருவம் நிறைவு செய்தல் - விளம்பி ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.870/PSD-F/2016 நாள் 03.03.2017
2. பதிவுத்துறைதலைவர் ஆணை எண்.4364/கே1/2016 நாள் 04.04.2017
3. பதிவுத்துறைதலைவர் ஆணை எண்.4364/கே1/2016 நாள் 21.06.2017
4. மாவட்டப்பதிவாளர், கரூர் (தணிக்கை) ந.க.எண்.2/தபி/2020 நாள் 02.01.2020 உடன் பெறப்பட்ட கருத்துரு.

*****

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் தேர்வாணையக் கடிதப்படி பதிவுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் ஆணைப்படி தட்டச்சராக நியமனம் செய்யப்பட்ட திருமதி.சி.தீபா, பார்வை 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையின்படி, கலம் 5-ல் காணும் நாள் முதல் பணிவரன்முறை செய்தும் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 32(a)(i)ன்படி, மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்பட்டது.

2. இவர் அரசாணை எண்.130/பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 22.7.2008-ன்படி தொழில்நுட்ப கல்வி துறையால் நடத்தப்பெறும் 'Certificate Course in Computer on Office Automation' தேர்வில் கலம் 7ல் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் தேர்ச்சி பெற்றுள்ளார். கலம் 8-ல் குறிப்பிட்டுள்ள நாளில் இரண்டாண்டு பணியினை நிறைவு செய்துள்ளார்.

தகுதிகாண் பருவக்காலத்தில் இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை/விசாரணை ஏதும் இல்லை என்றும் தண்டனைகள் ஏதும் வழங்கப்படவில்லை என்றும் சம்மந்தப்பட்ட மாவட்டப் பதிவாளர் அறிக்கை அளித்துள்ளார்.

3. எனவே, தமிழ்நாடு அரசுப்பணியாளர்(பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 32(2)-ன்படி இவர் கலம் 8-ல் குறிப்பிட்டுள்ள தேதியில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடித்ததாக இதன் மூலம் விளம்பி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | தேர்வாணைய முதுநிலை வ.எண். | தட்டச்சரின் பெயர் திருமதி | பணிபுரியும் அலுவலகம் | பணிவரன் முறை நாள் | விடுப்புக் காலம் | கணினித் தேர்வில் தேர்ச்சி பெற்ற மாதம்/ ஆண்டு | தகுதிகாண் பருவம் நிறைவு செய்யும் நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | 29F | சி.தீபா | மாவட்டப் பதிவாளர் அலுவலகம் (தணிக்கை) கரூர் | 12.04.2017 மு.ப | 266 நாட்கள் | ஜுன் 2014 | 01.01.2020 |

4. இவர் தகுதிகாண் பருவம் நிறைவு செய்தது குறித்த பதிவுகளை தனியரது பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளுமாறும், பணிப்பதிவேடு பெறப்பட்டமைக்கு ஒப்புகை அனுப்பவும் கரூர் மாவட்டப்பதிவாளர்(தணிக்கை) கோரப்படுகிறார்.

ஒம்/06.02.2020
பதிவுத்துறைதலைவர்

/ஆணைப்படி/

7/2/2020
மாவட்டப்பதிவாளர்

7/2/2020

பெறுநர்:
திருமதி.சி.தீபா,
தட்டச்சர்,
மாவட்டப்பதிவாளர் அலுவலகம் (தணிக்கை), கரூர்
(கரூர் மாவட்டப் பதிவாளர் மூலம்)

**நகல்:**
1. மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), கரூர்
   (தட்டச்சரின் பணிப்பதிவேட்டுடன்)
2. முக்கிய ஆணைக் கோப்பு/தனி நகல் - 1